# கைநூல்

## சமூகப் பாதுகாப்புச் சபை.

சுயதொழில் புரிவோருக்கான ஓய்வூதியச் சம்பளமும், சமூகப்பாதுகாப்புப் பிரதிலாபத் திட்டமும்.

சமூக சேவைகள் அமைச்சு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைநூல்

## சமூகப் பாதுகாப்புச் சபை.

சுயதொழில் புரிவோருக்கான ஓய்வூதியச் சம்பளமும், சமூகப்பாதுகாப்புப் பிரதிலாபத் திட்டமும்.

சமூக சேவைகள் அமைச்சு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முகவரை.

சுயதொழில் புரிவோருக்கான ஒய்வூதியச் சம்பளம் சமூகப் பாதுகாப்பு பிரதிலாபத் திட்டத்திற்கு அங்கத்தவர்களை சேர்ப்பதற்கு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களின் உதவிக்காக இந்தக் கைநூல் தயார் செய்யப்பட்டுள்ளது.

1996ம் ஆண்டு 17ம் இலக்கத்தைக் கொண்ட சமூகப் பாதுகாப்புச் சபைச் சட்டத்திலும் அதன் கீழ் உருவாக்கப்பட்டிருக்கும்.ஒழுங்குவிதிகளிலும் கொடுக்கப்பட்டிருக்கும் உரிய நிபந்தனைகள் அவற்றை தொகுக்கும் போது உள்ளடக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் கைநூலில் அடங்கும் விபரங்கள் திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டிருக்கும் பிரதிலாபம் சம்பந்தமான விபரங்களை இலக்காகிய குழுக்களுக்கு அறிவிப்பதற்கும் அங்கத்தினர் பட்டியலில் சேர்க்கும் செயல்முறை முறைகளை சரியாக நிறைவேற்றுவதற்கும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு உதவியளிக்குமென நான் உறுதியாக நம்புகிறேன்.

திருமதி .வீ. ஜெகராசசிங்கம்
தலைவர்,
சமூக பாதுகாப்பு சபை,
585, காலி வீதி,
கொழும்பு -06.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


| பந்தி | பக்கம் |
| --- | --- |
| 1. பணிப்பாளர் சபை | 02 |
| 2. சபையின் கடமைகள் | 02 |
| 3. திட்டத்தில் சேர்வதற்குரிய தகைமைகள் | 03 |
| 4. ஒரு சுயதொழிலில் ஈடுபட்டுள்ளவரின் வரையறை | 04 |
| 5.உதவுப்பணம் | 06 |
| 6 .நன்மைகள் | 11 |
| 6.1 ஓய்வூதியங்கள் | 12 |
| 6.2 வலுவிழந்தமைக்கான பிரதிலாபங்கள் | 13 |
| 6.3 பகுதியளவு வலுவிழப்பிற்கான பணிக்கொடைகள் | 14 |
| 6.4 முழுமையாக வலுவிழந்தமைக்கான பணிக்கொடை | 15 |
| 6.5 இறப்புப் பணிக்கொடை | 16 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7 .தங்கியிருப்போருக்குரிய நன்மைகள் 16

8 .இடர்திகதி 17

9 .ஒப்பந்த ஆவணங்கள் 18

10.பணவைப்புப் புத்தகம் 19

11. காலாண்டு உதவிப்பணங்களைக் கொடுப்பதற்குரிய திகதி 19

12 .காலாண்டு உதவிப்பணக் கொடுப்பனவுகளைக் கொடுக்கத் தவறுகை 20

13. உதவிப் பணங்களை மீளப்பெறல் 21

14. சேரும்முறை 22

(1) முகவர்கள் 22

(11) விண்ணப்பங்களை அனுப்பதல்

(111)அங்கத்தவராக சேரும் திகதி 23

(1v ) அங்கத்தவராக சேர்க்கக் கணிக்கப்படும் வயது 24

( v ) பிரதேசச் செயலக அலுவர்களின் கடமைகள் 25

15. தொடர்பு கொள்ளக்கூடிய சபை உத்தியோகத்தர்களின் தொகுதி 30

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைநூல்

## சமூகப் பாதுகாப்புச் சபை.

### சுயதொழில்களில் ஈடுபடுகின்றவர்களுக்கான ஓய்வூதியச் சம்பளமும் சமூகப் பாதுகாப்பு பிரதிலாபத்திட்டமும்.

முன்னைய சட்ட உருவாக்கத்தின் கீழ் ஏற்கனவே ஏற்றுக் கொள்ளப்பட்டவிவசாயிகளினதும், மீனவர்களினதும் ஓய்வூதிய சம்பளத்தில் உள்ளடக்கப்படாத சுயதொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்காக ஓய்வூதிய சம்பளத்தையும், சமூகப் பாதுகாப்பு பிரதிலாப திட்டத்தையும் சமூகப் பாதுகாப்பு சபையின் 1996ம் ஆண்டு 17ம் இலக்கச் சட்டத்திற்கமைய ஏற்படுத்தி சட்டமூலமாக்குவது பாராளுமன்றத்தின் நோக்கமாக இருந்தது.

சட்டம் 1996ம் ஆண்டு யூலை மாதம் பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டு கௌரவ. அமைச்சரின் கட்டளையின் பெயரில் இத்திட்டம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது 16. 10. 1996ம் ஆண்டு தொடக்கம் செயற்படுமாறு அரசாங்க வர்த்தமானியில் பிரசுக்கப்பட்டது. திட்டத்தின் உருவாக்கத்திற்காக பிரத்தியோகமான முன்னேற்பாடுகள் சட்டத்தில் ஒன்று சேர்க்கப்பட்டு, அதன் நிர்வாகமும் முகாமைத்துவமும் இந்தக்கைநூலில் சுருக்கமாக விவரிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.பணிப்பாளர்கள் சபை.

சட்ட அமுலாக்கத்தின் பொறுப்பு, சட்ட பூர்வமாக சமூக அபிவிருத்தி சபை எனப் பெயரிடப்பட்ட ஒரு பணிப்பாளர்கள் சபைக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

இலங்கை அரசியல் யாப்பில் வரையறுக்கப்பட்ட படி இது ஒரு பகிரங்க பொது கூட்டுத்தாபனமாகும்.

சபைக்கு கௌரவ. சமூக சேவைகள் அமைச்சரினால் தெரிவு செய்யப்பட்ட ஏழு பணிப்பாளர்கள் இருக்க வேண்டும். அவர்களில் ஒருவர் அரசாங்க திறைசேரியை பிரதிநிதிப் படுத்துபவராக இருத்தல் வேண்டும்.
அமைச்சரால் பணிப்பாளர்களில் ஒருவர் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டு அவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர் சபையின் பிரதான நிறைவேற்று அதிகாரியாக செயல் புரிவார். பணிப்பாளர் சபை நியமனத் திகதியிலிருந்து மூன்று வருடங்களுக்கு நியமிக்கப்படுவர். அதன் மூன்று வருட காலவரையின்போது சபையில் ஏற்படும் ஒரு வெற்றிடத்தை பூர்த்தி செய்வதற்கு நியமிக்கப்பட்ட எந்தவொரு பணிப்பாளரும், அப்போது செயற்படும் சபையின் எஞ்சிய கால பகுதிக்கு, பணிப்பாளராக கடமையாற்றுவார்.

## 2.சபையின் கடமைகள்.

இப்போதைய சட்ட ஆதாரங்களிற்கேற்ப சமூகப் பாதுகாப்புச் சபையின் சட்ட பூர்வமான கடமைகளாவது, மீனவத்துறைகளிலும்,விவசாயத்துறைகளிலும் ஈடுபட்டுள்ளவர்களைத் தவிர சுயதொழில்கள் புரிவோர்களுக்காக ஓய்வூதிய சம்பளத்தையும் சமூகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாப்புப் பிரதிலாபத் திட்டத்தையும் ஏற்படுத்தி அந்தத்திட்டத்தை நிர்வகித்து நடத்துவதாகும்.

## 3.திட்டத்தில் சேர்வதற்குரிய தகுதிகள்.

சமூகப் பாதுகாப்புச் சட்டமானது 18 வயது முதல் 59 வயது வரையான சுயதொழில் புரிவோர்கள் திட்டத்தில் இணைவதற்கு உரிமையளித்தலை வரையறுக்கிறது. திட்டத்தில் இணைவதற்கு உரிமையளிக்கப்பட்ட சுயதொழில் புரிவோரின் வர்க்கங்களும் அங்கத்தவர்களை திரட்டுதல் சம்பந்தமான ஏனைய வரையறைகளும் நிபந்தனைகளும் சமூக சேவைகளுக்குப் பொறுப்பான அமைச்சரால் வடிவமைக்கப்பட்ட சட்ட ஒழுங்குகளிற்கேற்ப திட்டத்தில் இணைக்கப்பட்டு அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருக்கிறது.

கீழே காணப்படுபவை ஒரு பங்காளராக அங்கத்தவரை திரட்டுதல் சம்பந்தமான சட்ட ஒழுங்குகளால் ஏற்படுத்தப்பட்ட வரையறைகளாகும்.

(1).சுயதொழிலில் இருந்து வருடாந்த வருமானம் ரூபா 36,000/- விற்கு மேற்படலாகாது.
(வருமான வரிக்கு பொறுப்பாளிகளற்ற சகல சுயதொழில் புரிவோருக்குமான தகுதியை விஸ்த்தரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. )

(11). இப்போது ஊழியர் சேமலாபநிதி நன்மைகளுடன் ஒரு பதவியில் உள்ளவராக இருத்தலாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(111) தாரம் இழந்த பின்னர் ஒய்வூதியம் பெற உரிமையற்றவராகவும் வேறு எந்த வித ஒய்வூதியத் திட்டத்திற்கும் உட்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

## 4.ஒரு சுயதொழிலில் ஈடுபட்டுள்ளவர் என்பதன் வரைவிலக்கணம்.

அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட கட்டளைக் கேற்ப சுயதொழிலில் ஈடுபட்டுள்ளோரின் வர்க்கங்களைத் தெளிவுபடுத்திக் காட்டுவதற்கு சட்டத்தின் 6ம்பிரிவு அமைச்சருக்கு அதிகாரமளிக்கிறது. ஒரு ஒழுங்கு அடிப்படையிலும் ஊழியர் சேமலாபநிதி நன்மைகளுடனும் வேறொரு நிறுவனத்தின் கீழ் வேலையற்றிருக்கும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்கள் திட்டத்தில் பங்களிப்பாளர்களாக இணைவதற்கு உரிமையளிக்கப்பட்டிருப்பதாக விவரிக்கப்பட்டிருக்கிறது.

1. விவசாய, மீன்பிடி, கால்நடை வளர்ப்பின் ஆரம்ப உற்பத்தி தவிர்ந்த ஏனைய உற்பத்திகள்.

2. வன வளர்ப்பு.

3. சுரங்கம் அறுத்தலும் ,கல் தோண்டுதலும்

4. உற்பத்திகள்.

5. பொதியிடுதலும், களஞ்சியப்படுத்தலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. கட்டிட நிர்மாணம்.

7. மின், வாயு, நீர்.

8. போக்குவரத்து.

9. பழுது பார்த்தலும் பராமரித்தலும்.

10. வியாபாரமும் வணிகமும்.

11. காப்பறுதியும் வங்கியியலும்.

12. சொத்துக்களும் வியாபார சேவைகளும்.

13. தொடர்பாடல்.

14. சமுதாய சமூக பிரத்தியேக சேவைகள்.

15. விவசாய, மீன்பிடி, சமூகப் பாதுகாப்பு நன்மைத் திட்டத்தின் கீழ் அடங்காத ஏனைய துறைகளில் உள்ள தொழில் முயற்சிகள்.

உதாரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

1. மெத்தைகள், சட்டி பானைகள் சுத்தம் செய்யும் பொருட்கள், வேறு விளையாட்டுப் பொருட்கள் போன்ற குடிசைக் கைத்தொழில்கள்.

2. மேசன்கள், தச்சர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. மின்தொழிநுட்பர்கள், நீர்க் குழாய்கள் பொருத்துனர்கள்.

4. சாரதிகள், வண்டிக் காரர்கள், நாட்டாண்மைகள்.

5. திருத்துனர்கள். (மோட்டார் வாகனங்கள் சைக்கிள்கள் அல்லது இயந்திரங்கள்.)

6. சிறிய அளவிலான வர்த்தகர்கள்.

7. இனிப்புப் பண்டங்கள் வேறு உணவு வகைகளை விற்பனைக்காக தயாரிப்போர் போன்றோர்கள்.

அரசாங்க அறிக்கையில் பிரசுரிக்கப்பட்ட கௌரவ. அமைச்சரின் கட்டளைக்கேற்ப, முறைசாரா அடிப்படையில் கடமை புரியும் ஒருவருக்கும் ஒரு சுயதொழில் புரிவோராக இணைவதற்கு தகுதியளிக்கப்பட்டிருக்கிறது.

கீழே காணப்படுபவை உதாரணங்களாகும்.

வீட்டுப் பணியாட்கள்.
உரிய காலத்தில் அல்லது தொழில் அடிப்படையில் வேலை பெறுவோர்.

## 5. உதவுப்பணம்.

திட்டத்தில் இணையும் ஒருவர் தன் உதவுப் பணத்தை செலுத்துவதில் காணப்படும் இரண்டு முறைகளில்ஒன்றை தெரிவு செய்யக்கூடியதாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவையாவன;-

(1) அங்கத்தவராகச் சேர்வதற்கு கொடுக்க வேண்டிய முதல் உதவிப் பணத்திலிருந்து ஆரம்பித்து, குறித்த உதவிப் பணத்தை காலாண்டு தவணைக் கட்டணமாகக் கொடுக்கும் விருப்பம்.

(11) முழுத்தொகையையும் கொடுத்து அங்கத்தவராக சேரும் போதே பூரண பங்களிப்பைப் பெற்றுக் கொள்ளும் விருப்பம்.

ஒரு உதவுப்பணத்தொகை செலுத்துநர், விவரிக்கப்பட்ட முழுக்காலாண்டு உதவுப் பணத் தொகையையும் செலுத்தினால் அவர் காலாண்டு உதவுப் பணம் செலுத்துவதன் உரிமையின் கீழ் விவரிக்கப்பட்ட மாதாந்த ஓய்வூதியச் சம்பளத்தை பெற்றுக் கொள்ள உத்துடையவராகிறார்.

சேரும் போது முழு உதவுப் பணம் செலுத்தும் இரண்டாவது விருப்பத் திட்டத்திற்கேற்ப காலாண்டு கொடுப்பனவு உரிமையின் கீழ் சேகரிக்கப்பட்ட தொகையின் மீது ஒரு கனிசமான கழிவுக் கொடுப்பனவு அனுமதிக்கப்படும்.

உதாரணமாக 18 வயதில் திட்டத்தில் சேரும் ஒருவர் முழுத்தொகையையும் செலுத்துவதாகத் தெரிவு செய்தால் காலாண்டு அடிப்படையில் செலுத்தும் திட்டத்தின் கீழ் அவருக்கு ரூபா 8,400/- க்குப் பதிலாக ரூபா 1920 /- செலுத்த வேண்டியிருக்கிறது. இங்கு கழிவுக் கொடுப்பனவு உயர்ந்த பட்சம் 77. 14 சவீதமாக இருக்கிறது. அதேபோல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35 வயதை உடைய ஒருவருக்கு காலாண்டு அடிப்படையில் செலுத்தும் திட்டத்தின் கீழ் ரூபா 8,500 /- க்குப் பதிலாக ரூபா 2,695/- செலுத்த வேண்டியிருக்கிறது.

இங்கு வழங்கப்படும் கழிவுக் கொடுப்பனவு 68. 29 சதவீதமாகும். விருப்பமான முழு உதவுப் பணத்தொகை, மாதாந்த ஓய்வூதியச் சம்பளம், விருப்பமான முழு உதவுப் பணத்திற்கான கழிவு வழங்குதலின் சதவீதம் ஆகிய ஒவ்வொரு தவணைகளின் அளவுகளும் இத்துடன் இணைக்கப்பட்டிருப்பதை தவணை தொகைகளின் ஒரு கால அட்டவணை சித்தரிக்கிறது .

இப்போதைய அங்கத்தினராதலின் ஏற்பாட்டிற்கேற்ப, விண்ணப்பத்தாரியின்தெரிவிற்கேற்பவும்,அங்கத்தினராதலின் மீதான முதல் காலாண்டு உதவுப் பணத்தை அல்லது முழு உதவுப் பணத்தை மீட்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதற்கும், அப்படிப்பட்ட பணத்தை உரிய விண்ணப்பங்களுடன் சபைக்குத் திருப்பி அனுப்பப்படுவதற்கும். பிரதேசச் செயலாளர்களிடம் இருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் காலாண்டு உதவுப்பணம் செலுத்துவோரிடமிருந்து மீளப்பெறப்பட வேண்டிய இரண்டாம் தவணையின் மீதி உதவுப்பணம் தபால்/ உபதபால் அலுவலகத்தின் உடாகவும் சேகரிக்கப்படல் வேண்டும். இந்த நோக்கத்திற்காக தபால் மா அதிபரிற்கும் சமூகப் பாதுகாப்புச் சபைக்கும் இடையில் ஒரு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. சபை தபால் மா அதிபரின் சேவைக்கென சேவை கட்டணத்தை வழங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச செயலாளர்களுக்கும் அவரது பணியாட்களுக்கும் அவர்களது செயலகத்தினால் சேர்த்துக் கொள்ளப்பட்ட விண்ணப்பத் தொகைக்கு ஏற்ப ஊக்குவிப்பு பணம் கொடுப்பதென்று சபை தீர்மானித்திருக்கிறது .

ஒவ்வொரு விண்ணப்பத்தாயிடமிருந்தும் திரட்டப்பட்ட பணத்தொகையை கருத்தில் கொள்ளாது கீழே குறிப்பிட்டதற்கேற்ப ஊக்குவிப்பு கொடுப்பனவை ஒரே மட்டத் தொகையாகக் கொடுப்பதற்கு சபை தீர்மானித்திருக்கிறது.

_ ஒவ்வொரு காலாண்டு உதவுப்பணம் செலுத்துபவருக்காக ரூபா 27. 00/ -

_ ஒவ்வொரு முழு உதவுப்பணம் செலுத்துபவருக்காக ரூபா 37. 00/ -

விவரிக்கப்பட்ட உதவுப்பணக் கொடுப்பானது ஒரு பங்களிப்பாளருக்கு திட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்ட எல்லா நன்மைகளுக்கும் உரிமையளிக்கிறது. எதிர் பார்க்கப்பட்டதை விட மேலதிகப் பணத்தொகையையுமோ, காலாண்டு உதவுப் பணக் கொடுப்பனவில் ஏற்படக்கூடிய தாமதத்திற்காக எந்தவித அபராதத்தையுமோ செலுத்தும்படி ஒரு பங்களிப்பாளரிடம் கோருவதற்குச் சமூகப் பாதுகாப்புச் சட்டத்திற்கு உரிமையில்லை.

ஒய்வூதியச் சம்பளமும் சமூகப் பாதுகாப்புப் பிரதிலாபத் திட்டமும் ஒரு தர்ம சிந்தனையுள்ள ஏற்பாடல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டத்தில் இணைவதற்கான தீர்மானம். முற்றுமுழுதாக தன்னிச்சையாக இணைவதற்கு பெயர் கொடுக்கப்பட்டவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டதே தவிர சட்டரீதியான நிர்ப்பந்தத்தாலோ அல்லது வேறு வழிகளால் ஏற்பாடு செய்யப்பட்டதோ அல்ல. தம்மால் பங்களிப்பு வழங்க இயலுமான காலத்தில் பெயரளவான உதவுப் பணத்தை சமூகப் பாதுகாப்புச் சபைக்கு வழங்கும் படியும், வயது முதிர்வின் போது அல்லது சம்பாதிக்கும் வலுக்குன்றும் காலத்தின் போது தங்கள் சொந்த உதவுப் பணத்திலிருந்து உரிய நன்மைகளை பெற்றுக் கொள்ளும்படியும்,சமூகப் பாதுகாப்பு மாதிரியல்லாத முறையாக ஒழுங்குபடுத்தப்படாத குழுக்களால் இதுவரை கவனியாது அலட்சியம் செய்யப்பட்டு வந்த ஒரு மக்கள் குழுவிற்கு அதிகாரமளித்து அரசாங்கத்தால் வழங்கப்படும் ஒரு வசதி இதுவாகும் .

இலக்குக்குட்பட்ட பகுதியினரை திட்டத்தில் அங்கத்தவர்களாக இணையும் படி அழைத்தலுக்கும் அவர்களை உற்சாகப்படுத்துவதற்கும் சமூகப் பாதுகாப்புச் சபையின் கையில் இருக்கும் ஆயுதமானது நீண்ட காலம் நிலைத்திருக்கக்கூடிய ஓய்வூதியச் சம்பளம், ஊன, இறப்புப் பணிக்கொடைகளின் கொடுப்பனவுகளைச் சாத்தியமாக்கும் நிதியத்தை பெருக்குவதற்கு ஆண்டு தோறும் அரசாங்கத்தால் பெற்றுக் கொள்ளப்பட்ட உதவுப் பணமாகும். அரசாங்க உதவுப் பணமின்றி அங்கத்தவர் உதவுப் பணத்தால் மட்டும் இந்தப் பொறுப்புக்களை சந்திக்க சபைக்கு இயலாமல் இருக்கும்.

முதலீட்டுச் செலவையும் மீண்டுவரும் செலவையும், சபையின் மொத்த நிர்வாகச் செலவையும் அரசாங்கம் ஒவ்வொரு ஆண்டின் மதிப்பீட்டுத் தொகையினுடாகச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலுத்துகிறது. சகல உதவுப் பணத்தொகை செலுத்துநரிடமிருந்தும்
சேகரிக்கப்பட்ட பணம் உதவுப்பணத்தொகை செலுத்துநர்களின் பிரதிலாபக் கொடுப்பனவிற்காக திட்டநிதியத்தில் செலுத்தப்படுகிறது. ஆகவே, உதவுப் பணத்தொகை செலுத்துநர்களின் பணத்திற்கான பாதுகாப்பு அரசாங்கத்தினால் உத்தரவாதமளிக்கப்படுகிறது.

தங்களது பணத்தை எதிர்கால உதவுப்பணத்தொகை செலுத்துநர்கள், இழந்து விடுவார்கள் என்ற அச்சத்தை நீக்குவதற்காக இந்தத் தகவல் தெளிவாகத் தெரிவிப்பதற்கு தகுதியுடையதாகிறது.

பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட அரசாங்க வரவுச் செலவுத் திட்டத்திலிருந்து சபை நியமித்தப் பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கு சட்டத்திற்குக் குறித்த முன்னேற்பாடு இருக்கிறது.

## 6. நன்மைகள்.

இத்திட்டத்தில் இரண்டு அம்சங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன அவை வாழ்நாள் ஓய்வூதியக் கொடுப்பனவுப் பகுதியும் காப்புறுதிப் பகுதியுமாகும். இந்நாட்டில் எந்தக் காப்புறுதி நிறுவனத்தாலும் வழங்கப்பட்ட சாதாரண ஆயுட் காப்புறுதிக் காப்பையும் விட அது மிகவும் நன்மை வாய்ந்ததாகும்.

சகல காப்புறுதி நிறுவனங்களும் இலாப நோக்கமுடையதாகும் அந்தத் தருணத்தில் சமூகப் பாதுகாப்புச் சபை சேவை நோக்கத்துடனும் அரச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகவராகவும் இருந்து சமூக நலன்களை வழங்கிக் கொண்டிருக்கிறது.
எந்தவொரு சுயதொழில் புரிவோரும் அங்கத்தவராக இணையும் சந்தர்ப்பத்தில் ( சமூகப் பாதுகாப்புச் சபை ) உதவுப் பணத்தொகை செலுத்துனரால் பெறப்படும் விவரிக்கப்பட்ட நெடுவாழ்வு மாதாந்த ஓய்வூதியச் சம்பளத்திற்கும் மேலும் வலுவிழந்தவர்களின் உத்தரவாத கொடுப்பனவிற்கும் இறப்புப் பணிக் கொடைகள் இருந்தால் அவற்றின் கொடுப்பனவிற்கும்
அவர்கள் ஆரம்ப மாதாந்த ஓய்வூதியச் சம்பளங்களை பெறமுன் இப்படி நேரிடக்கூடியவைகளை அனுபவிக்கும் போதும் சமூகப் பாதுகாப்புச் சபை அவர்களுக்கு உத்தரவாதமளிக்கிறது.

## 6.1 ஓய்வூதியங்கள்.

சமூகப் பாதுகாப்புச் சபை சட்டத்தின் 9ம் பிரிவிற்கேற்ப திட்டத்தில் சேரும் 18 வயதிலிருந்து 54 வயது வரையறையுடையவர்கள் 60 வயதை அடையும் வரையும் அவர்கள் அங்கத்தினர்களாக சேர்த்துக் கொள்ளப்பட்ட நாளில் இருந்து மாதாந்த ஓய்வூதியச் சம்பளத்தைப் பெற உரித்துடையவர்களாகிறார்கள்.

55வயதிற்கும் 59 வயதிற்கும் இடைப்பட்ட வயதுப் பிரிவில் உள்ள ஒருவர் திட்டத்தில் சேரும் போது எப்படியோ சேர்ந்த திகதியிலிருந்து 5 வருடத்தின் பின் ஓய்வூதியச் சம்பளத்தைப் பெற்றுக் கொள்வதற்கு உரித்துடையவராகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்த சந்தர்ப்பத்திலிருந்து உதவுப் பணத்தொகை செலுத்துபவரின் வயது அடிப்படையின் மீது மாதாந்த ஓய்வூதியச் சம்பளம் ரூபா 500. 00 இல் இருந்து ரூபா 2,500 வரையான வீச்சில் இருக்கும். குறைந்த வயதில் திட்டத்தில் இணையும் உதவுப் பணத்தொகை செலுத்துனர்கள் பெருமளவிலான ஓய்வூதியச் சம்பளத்தைப் பெறுகிறார்கள்.

## 6 . 2 வலுவிழந்தமைக்கான பிரதிலாபங்கள்.

திட்டத்தின் காப்புறுதிப் பகுதியின் கீழ் வலுவிழந்தமைக்கான இரண்டு வகையான பிரதிலாபங்கள் காணப்படுகின்றன.

அவையாவன:-

(1)நிரந்தரமாக பகுதியளவில் வலுவிழந்தமைக்கான பணிக்கொடைகள்.

(11)நிரந்தரமாக முழுஅளவில் வலுவிழந்தமைக்கான பணிக்கொடைகள்.

இறப்புப் பணிக்கொடைகளின் கொடுப்பனவும் காப்பறுதிப் பகுதியின் கீழ் அடங்குகிறது. முழுமையாக வலுவிழந்தமைக்கான பணிக்கொடைகள் ரூபா 12 ,000 இலிருந்து ரூபா 50, 000 வரையாகும் சேர்ந்த நாளிலிருந்து உதவுப் பணத்தொகை செலுத்துபவரின் வயது அடிப்படையின் மீதான ரூபா 6, 000 லிருந்து 25,000 வரைக்கும் பகுதியளவில் வலுவிழந்தமைக்கும் இறப்புக்குமான பணிக் கொடைகள் வலுவிழப்பு அல்லது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறப்பு ஏற்பட்ட நேரத்தில் வயதிற்கேற்ப மட்டுப்படுத்தப்படுகிறது.

இந்த பணிக்கொடைகளின் விபரங்கள் கொடுக்கப்பட்ட "ஆ" அட்டவணை ஒழுங்கு விதிகளுடன் சேர்க்கப்பட்டு அது இலகுவாக ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்காக இத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறது. முழுமையாக வலுவிழந்தமைக்கான பகுதியளவில் வலுவிழந்தமைக்கான நிபந்தனைகளின் விளக்கங்கள் அரசாங்க வர்த்தமானியில் ஓழங்குவிதிகளில் சேர்க்கப்பட்ட 12ம், 13ம் ஒழுங்குவிதிகளின் கீழ் முறையே கொடுக்கப்பட்டுள்ளன.

## 6.3 . பகுதியளவுவலுவிழப்பிற்கான பணிக்கொடைகள்.

பகுதியளவில் வலுவிழந்த உதவுப் பணத்தொகை செலுத்துனர் ஒருவருக்கு கீழே காணப்படும் உரிமைகளைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கிறது.

(1)பகுதியளவில்வலுவிழந்தமைக்கான பணிக்கொடைகளைப் பெற்றுக் கொள்ளும் திட்டத்திலிருந்து விலகவும் அல்லது

(11)பணிக்கொடையைப் பெற்று மீதிக் காலாண்டு உதவுப் பணத்தொகையை தொடர்ந்து செலுத்தி கிடைக்க வேண்டிய மாதாந்த ஓய்வூதியச் சம்பளத்தைப் பெறுதல்.

இங்கு இணைந்து கொள்வதற்காக செலுத்த வேண்டிய முழுத்தொகையை செலுத்திய ஒரு உதவுப் பணத்தொகை செலுத்துனர் மேலதிக செலவின்றி அவருக்கு வரவேண்டிய மாதாந்த சம்பளத்தையும் பகுதியளவில் வலுவிழந்தமைக்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிக்கொடைகளையும் பெற்றுக் கொள்வதற்கு தன்னை உரிமையாளராக்கிக் கொள்கிறார்.

## 6.4 முழுமையாக வலுவிழந்தமைக்கான பணிக்கொடை.

தான் ஓய்வூதியச் சம்பளத்தை பெற முன் முழு அளவில் வலுவிழந்த ஒரு உதவுப் பணத்தொகை செலுத்துநரும் கீழே குறிப்பிடப்பட்டவைகளை பெற்றுக் கொள்வதற்கு உரித்துடையவராவார்.

(1)முழுமையாக வலுவிழந்தமைக்கான பணிக் கொடையைப் பெற்றுத் திட்டத்திலிருந்து விலகுதல் அல்லது

(11) மேலதிக கொடுப்பனவுகள் எதுவும் செலுத்தாமல் விவரிக்கப்பட்ட தனது ஆரம்ப மாதாந்த ஓய்வூதியச் சம்பளத்தை முழு அளவில் வலுவிழந்த நிகழ்ச்சியின் திகதியிலிருந்து பெறுவதற்கும்.

அங்கத்தவராவதற்குரிய முழுத்தொகையையும் செலுத்தி முழுமையாக வலுவிழந்த ஒரு உதவுப் பணத்தொகை செலுத்துனர் காலாண்டு உதவுப் பணத்தொகை செலுத்துனரோடு ஒப்பிடுகையில் அவர் சாதகமற்றவராகக் காணப்படுகிறார்.

ஏனெனில் அப்படிப்பட்ட பணத் தொகைச் செலுத்துநர் முழுமையாக வலுவிழந்த திகதியிலிருந்து மேலதிக உதவுப்பணம் எதுவும் செலுத்த வேண்டியில்லாதிருப்பதாலாகும். எப்படியோ இது முழுமையாக வலுவிழந்த உதவுப் பணத்தொகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலுத்துனருக்கு கொடுக்கப்பட வேண்டிய ஈடுசெய்யப்பட்ட கொடுப்பனவாகும்.

## 6.5 இறப்புப் பணிக்கொடை.

இறப்புப் பணிக்கொடை வழங்கப்பட வேண்டியவரில் தங்கியிருப்பவர்கள் அதாவது உயிரோடிருக்கும் வாழ்க்கைத் துணைக்கும் சட்ட முறையான பிள்ளைகளுக்கும் இவர்கள் இல்லாத போது அவரது இரத்த உரித்துடைய கிட்டிய உறவினர்களுக்கு பணிக்கொடை வழங்கப்படும்.

பணிக்கொடையின் கொடுப்பனவிற்கான முன்னுரிமை ஒழுங்கு வரிசைப்படி சட்டத்தின் இரண்டாவது அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ளது. சட்டத்தின் 13ம் பிரிவு இந்த விடையத்தை விவரிக்கிறது.

## 7. தங்கியிருப் போருக்குரிய நன்மைகள்

இத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெறும் ஒருவர் 80 வயதை அடைய முன்பாக இறந்தால் தாரம்

வேறு எந்தத் திட்டத்திற்கும் உதவிப் பணம் அளிப்பவராக வேறு எந்த ஓய்வூதியத்தை பெறுபவராக ஓய்வூதியம் பெறும் உத்துடையவராக இராவிட்டால்.

அவர் வாழ்ந்திருந்தால் 80 வயதை அடையும் வரையான காலத்திற்கு அவருடைய தாரத்திற்கு அவரது ஓய்வூதியம் தொடர்ந்து கொடுக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

_வேறு எந்தவித திட்டத்திலும் உதவுப் பணத்தொகை செலுத்துனராக இருத்தலாகாது.

_வேறு எந்தவித ஓய்வூதிய சம்பளத்தையும் பெறுபவராக இருத்தலாகாது.

_ ஒரு ஓய்வூதியச் சம்பளத்தை பெற உரித்துடையவராக இருத்தலாகாது.

இச் சந்தர்ப்பங்களின் வாழும் தாரத்திற்கு ஓய்வூதியத்தைக் கொடுக்க முடியாவிட்டால், அவருக்கு உதவிப்பணம் செலுத்தியவரினால் பெறப்பட்ட மாத ஓய்வூதியங்களின் மொத்தத் தொகையை ஈடுசெய்த பின்னர் வட்டியுடன் தேறிய உதவிப்பணம் கொடுக்கப்படும் .

முழுமையான வலது குறைவுக்கு உட்பட்டு வலது குறைவுப் பணிக்கொடையைக் கைவிட்டுத் தமது ஓய்வூதியத்தைப் பெற விரும்பும் உதவிப்பணம் செலுத்தும் ஒருவர் இறக்கும் போது, அவர் இறக்கும் வரை ஒவ்வொரு மாதமும் பெற்ற ஓய்வூதியத்தை ஈடுசெய்த பின்னர் வலது குறைவுப் பணிக்கொடையினதும் தேறிய உதவிப்பணங்களினதும் மொத்தத்தைப் பெறுவதற்கு அவருடைய சட்டரீதியான உரித்தாளர்கள் உரித்துடையவராவர்.

## 8. இடர்த் திகதி .

அத்தகைய வலது குறைவு அல்லது இறப்பு விபத்தின் விளைவாக ஏற்பட்டிருந்தால், உதவிப்பணம் செலுத்துபவர் பணிக்கொடையைப் பெறும் உரிமை அவர் சேர்ந்த திகதியிலிருந்து கணிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயினும், சேர்ந்த முதல் ஆண்டின்போது இயற்கைக் காரணங்களின் விளைவாக ஏற்பட்ட இறப்புகள் தொடர்பாகத் தங்கியிருப்போருக்கு நன்மதிப்பு அடையாளமாகச் சபை தண்ணளிக் கொடுப்பனவுகளை அளிக்கத் தீர்மானித்துள்ளது.

தற்போது உள்ள சட்டத்திற்கு அமைய திட்டத்திற்கு உதவிப்பணம் செலுத்துபவரின் பொறுப்புக்களும் உதவிப்பணம் செலுத்துபவர்களுக்குத் திட்டத்தின் பொறுப்புக்களும் பற்றி மேலே முழுமையாக விவரிக்கப்பட்டுள்ளது.

## 9.ஒப்பந்த ஆவணங்கள்.

கொடுக்கப்பட்ட உதவிப்பணங்கள் வருமதியாக உள்ள உதவிப்பணங்கள், உதவிப்பணம் கொடுத்தல் பற்றிய நிபந்தனைகள் ஒப்பந்தத்தின் படியான நன்மைகள் ஆகியவற்றைக் குறிப்பிடும் ஒப்பந்த ஆவணம் திட்டத்தில் அங்கத்தவராக சேர்த்துக் கொள்ளப்படும் உதவிப்பணம் செலுத்துபவர் ஒவ்வொருவருக்கும் வழங்கப்படுதல் வேண்டும்.

சேர்த்துக் கொள்ளப்படும் போது முழு உதவிப்பணமும் கொடுக்கப்பட்டால் அதனை ஒப்பந்தத்தில் வெளிப்படுத்தல் வேண்டும். முழு உதவிப் பணத்தையும் கொடுப்பவர்களுக்கு ஒப்பந்த ஆவணத்துடன் சிறப்புச் சான்றிதழும் வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10. பணவைப்புப் புத்தகம்.

காலாண்டு உதவிப் பணங்களைக் கொடுக்க விரும்பும் உதவிப்பணம் செலுத்தும் ஒவ்வொருவருக்கும் அவருடைய சொந்த விபரங்கள் சேர்ப்புஇலக்கம், ஒவ்வொரு காலாண்டுக்கும் கொடுக்கத்தக்க தவணைக் கட்டணத்தின் அளவு, அத்தகைய தவணைக்கட்டணங்களின் மொத்த எண்ணிக்கை, அத்தகைய தவணைக்கட்டணங்கள் கொடுக்கப்பட வேண்டிய அஞ்சல் அலுவலகம் ஆகியவற்றைக் குறிப்பிடும் பணவைப்புப் புத்தகம் வழங்கப்படும். இப்பற்று வரவேடுகள் சபையின் தலைமை அலுவலகத்திலே தயார்செய்து உறுதிப்படுத்தப்பட்டு உதவிப்பணம் செலுத்துபவருக்கு உரிய பிரதேசச் செயலாளரினுடாக வழங்கப்படும்.

## 11.காலாண்டுஉதவிப்பணங்களைக் கொடுப்பதற்குரிய திகதி.

கலாண்டு என்பது ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 31, யூன் 30, செப்ரெம்பர் 30 , டிசெம்பர் 31 ல் முடிவடையும் மூன்று மாதங்களைக் கொண்ட ஒவ்வொரு காலவெல்லையுமாகும் எனப் பிரமாணங்களில்வரையறுக்கப்படுகிறது.

சேர்க்கப்படும் போது கொடுக்கப்படும் முதலாந் தவணைக் கட்டணம் கொடுப்பனவு செய்யப்படும் காலாண்டிற்கு எதிரே ஈடுசெய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் கொடுக்க வேண்டிய தவணைக் கட்டணங்கள் ஒவ்வொரு அடுத்துவரும் காலாண்டின் முதல் திகதியில், அதாவது ஜனவரி 01 ,ஏப்பிறில் 01,யூலை 01,ஒக்ரோபர் 01 இல் கொடுபட வேண்டியனவாகும். அவை அத்தகைய காலாண்டின்போது கொடுக்கப்படுதல் வேண்டும்.

எனினும், அத்தகைய உதவிப்பணங்களைக் கொடுப்பதற்கு 30 நாள் கால அவகாசம் அளிக்கப்படும் உரிய காலாண்டின் இறுதியிலிருந்து 30 நாட்களுக்குப் பின்னர் கொடுக்கப்படும் காலாண்டு உதவிப்பணங்களைப் பொறுத்தவரை சபைக்கு அதன் முதலீடுகளில் கிடைக்கும் சராசரி வட்டியைக் காட்டிலும் இரண்டு சதவீதம் கூடுதலான வட்டி அறவிடப்படும்.

உதவிப்பணம் கொடுக்கும் எவரும் எவ்வெண்ணிக்கையான தவணைக் கட்டணங்களையும் முற்பணமாகக் கொடுக்கலாம் முற்பணமாகக் கொடுக்கப்படும் தவணைக் கட்டணங்களுக்காக அவர் வட்டி பெற உரித்துடையவராவர்.

## 12.காலான்டு உதவிப்பணக் கொடுப்பனவுகளைக் கொடுக்கத் தவறுகை.

காலாண்டு உதவிப்பணம் கொடுப்பவர் எவரும் 10 காலாண்டுத் தவணைக்கட்டணங்களைக் கொடுக்கத் தவறும் போது தமது உதவிப்பண உரிமையை இழப்பார். அவர் தம்மை மீண்டும் சேர்க்குமாறு பணிப்பாளர் சபைக்கு மேன்முறையீடு செய்யும் உரிமையைக் கொண்டிருப்பார். அவர் சபையின் தீர்மானம் தொடர்பாகத் திருப்தியடையா விட்டால் சமூக சேவைகள் அமைச்சின் செயலாளருக்கு மேன்முறையீடு செய்யும் உரிமையையும் கொண்டிருப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தீர்மானங்கள் சம்பந்தப்பட்டவருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்படுதல் வேண்டும். செயலாளரின் தீர்மானம் சட்டப்படி கட்டுப்படுத்துவதும் இறுதியானதும் ஆகும்.

## 13. உதவிப் பணங்களை மீளப்பெறல்.

(1) கொடுக்க வேண்டிய காலாண்டு உதவிப்பணாங்களின் மொத்தத்தொகையின் 10 சதவீதத்திற்குக் குறையாத தொகையைக் கொடுத்துள்ள உதவிப்பணம் கொடுப்பவர் எவரும் திட்டத்தை விட்டு விலக விரும்பினால், வட்டியோடு சேர்த்து தேறிய உதவிப்பணாங்களை மீளப்பெறும் உரிமையைக் கொண்டிருப்பார்.
( பிரமாணம் 9 (2) )

(11) குறைந்த பட்சம் 10 தவணைக் கட்டணங்களையேனும் கொடுக்காதவரும் மேலும் உதவிப்பணாங்களை கொடுக்கத் தவறுபவருமான உதவிப்பணம் கொடுக்கும் எவரும் ஏற்கெனவே செலுத்திய உதவிப்பணாங்களை இழப்பர்.(பிரிவு 15 (1) )

(111) உதவிப்பணம் செலுத்தும் எவரும் சேர்ந்த திகதிக்குப் பின்னர் திட்டத்திற்கு உதவிப்பணம் செலுத்துவதற்கான தகைமைகளை இழந்திருந்தால், வட்டியுடன் சேர்த்து செலுத்தப்பட்ட தேறிய உதவிப்பணாங்களை மீளப்பெறும் உரிமையைக் கொண்டிருப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14.சேரும் முறை.

## (1) முகவர்கள்.

சமூகப் பாதுகாப்புச் சபை இத்திட்டத்திற்கு உதவிப்பணம் செலுத்துபவர்களைச் சேர்ப்பதற்காக நாடளாவிய பிரதேசச் செயலாளர்களின் ஒத்துழைப்பையும் உதவியையும் நாடுகின்றது .
அவர்கள் சேர்க்கும் நடவடிக்கையில் சமூகப் பாதுகாப்புச் சபையின் முகவர்களாகச் செயற்படுவர் அத்தகைய முகவர்களை நியமிப்பதற்கான ஏற்பாடு சமூகப் பாதுகாப்புச் சபை அதிகாரச் சட்டத்தில் உண்டு.
உதவிப்பணம் செலுத்துபவர்களின் உரிய வதிவுப் பிரதேசத்தின் கிராம சேவையாளருடன் அல்லது சமூர்த்தி முன்னோடி கீழ் மட்டத்தில் உறுப்பினர்களைச் சேர்க்கும் நடவடிக்கை தொடங்கி ,சமூக சேவை அலுவர்கள், பிரதேசச் செயலாளரின் ஏனைய உதவியாளர்கள் ஆகியோரினூடாகப் பிரதேசச் செயலாளருக்கு வருகின்றது. பிரதேசச் செயலாளர் அவருடைய பணியாளர் ஆகியோர் மீது சுமத்தப்பட்டுள்ள பளுவைக் குறைக்கு முகமாகச் சபை சுயதொழில் வசதிகளை அளிக்கும் அல்லது அவற்றுக்கு ஆதரவளிக்கும் அரசாங்கச் சார்பற்ற தாபனங்களையும் அரசாங்கத் தாபனங்களையும் முகவர்களாக நியமிக்கும் சாத்தியக் கூறுபற்றி ஆராய்ந்து வருகின்றது.

## (11) விண்ணப்பங்களை அனுப்புதல்.

பிரதேசச் செயலாளரின் அலுவலகங்களுக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் இரு வாரங்களின் இறுதியில் அவ்விண்ணப்பங்கள் தொடர்பாகச் சேகரிக்கப்பட்ட மொத்தத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகைக்கான காசோலையுடன் சபையின் தலமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டுமெனச் சபை எதிர்பார்க்கின்றது. சபையின் தலைமை அலுவலகத்திற்கு அவ்வாறு அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பங்களைப் பட்டியற்படுத்துவதற்கான படிவங்கள் சபாச 4 ஒவ்வொரு பிரதேசச் செயலாளருக்கும் வழங்கப்பட்டுள்ளன அவசியமான போது பாஸ் புத்தகங்களையும் ஒப்பந்த ஆவணங்களையும் வழங்குவதை இலகுபடுத்துவதற்கும் ஆவணவாக்கச் செயன்முறையை இலகுபடுத்துவதற்கும் இப்படிவங்களை நிரப்பும் போது செம்மையை நிச்சயப்படுத்துமாறு பிரதேசச் செயலாளர்கள் வினயமாக வேண்டப்படுகின்றனர்.

அங்கத்தவராக சேர்ப்பதற்குச் சேகரிக்கத்தக்க உதவிப் பணத்தொகை மிக முக்கியமானது முன்னர் விளக்கியுள்ளவாறு, காலாண்டுத்தொகை அல்லது மொத்தத் தொகை என்னும் உதவிப் பணம் உறுப்பினராகச் சேரும் திகதியில் உதவிப்பணம் செலுத்துபவரின் வயதுடன் நேரடியாகத் தொடர்புபட்டது.

## (111) அங்கத்தவராக சேரும் திகதி.

அங்கத்தவராக சேரும் திகதி என்பது உதவிப்பணம் செலுத்துபவர் பிரதேசச் செயலாளரின் அலுவலகத்தில் தமது உதவிப்பணத்தைக் கொடுத்து கொடுத்த தொகைக்காகப் பற்றுச்சீட்டைப் பெறும் திகதியாகும். முப்பிரதிகளில் படிவம் சபாச 2 இலான பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் இந்நோக்கத்திற்காக எல்லாப் பிரதேசச் செயலாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (iv) அங்கத்தவராக சேர்க்கக் கணிக்கப்படும் வயது.

உறுப்பினராகச் சேர்ந்த திகதியை உடனடியாக அடுத்துள்ள பிறந்த தினத்தில் உள்ள ஆண்டுகளின் எண்ணிக்கையே வயதாகும்

உதாரணமாக.

(அ) 1970.01.01 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பிறந்த ஒருவர் 1998.01.01 ஆந் திகதி திட்டத்தில் சேர்ந்தால், அவர் 1997.12.31 ஆந் திகதி 28 வயதைப் பூர்த்தி செய்துள்ளமையால் உறுப்பினராகச் சேர்க்கும் தேவைக்கு அவருடைய வயது 29 அதாவது 1999-1970 ஆகும்.

(ஆ) 1970.01.02 ஆந் திகதி அல்லது அதன் பின்னர் பிறந்த ஒருவர் 1998.01.01 ஆந் திகதி திட்டத்தில் சேர்ந்தால் அவருடைய வயது 28, அதாவது 1998-1970 ஆகக் கணிக்கப்படும் இங்கு உடனடியாக அடுத்துள்ள அவருடைய பிறந்த தினம் 1998.01.02 ஆகும் பிறந்த திகதியை எப்போதும் பிறப்புச் சான்றிதழுடனோ தேசிய அடையாள அட்டையுடனோ சரி பார்த்தல் வேண்டும்.

சேர்க்கப்பட்ட தொகை சேர்க்கப்பட வேண்டிய தொகையிலும்1 ரூபா குறைவாக இருந்தாலும் சட்டபூர்வமாக உறுப்பினராகச் சேர்ப்பதையும் உரியவருக்கு ஒப்பந்த ஆவணத்தை வழங்குவதையும் சபையின் தன்னியக்க ஆவணவாக்க முறைமை தடுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(v) பிரதேசச் செயலக அலுவலர்களின் கடமைகள்

(அ) கிராம சேவையாளர் /சமூர்த்தி முன்னோடி.

_ உதவிப்பணத்தைச் செலுத்தத் தக்கவர் சபாச 1 படிவத்தில் விண்ணப்பத்தைச் சரியாக நிரப்புவதை நிச்சயப்படுத்தல்.

_ விண்ணப்பத்தின் பகுதி 11 இலே 7ம் 8ம் ஆம் பந்திகளில் விண்ணப்பக்காரரின் தகுதியை உறுதிப்படுத்தல்.

(ஆ) சமூக சேவை உத்தியோகத்தர்.

_ விண்ணப்பத்தின் பகுதி 111 இன் 9ஆம் ,10ஆம் பந்திகளைப் பூரணப்படுத்தி உறுதிப்படுத்தல்.

_ விண்ணப்பத்தாரியால் வழங்கப்பட்ட சரியான தகவல்கள் செம்மையானதாவென நிச்சயப்படுத்திக் கொள்ளல்.

(இ) விடய எழுது வினைஞர்.

_ விண்ணப்பதாரியிடமிருந்து விண்ணப்பத்தையும் சரியான உதவுபண தொகையையும் பெறுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

_ விண்ணப்பத்தின் 12ம் பந்தியில் வழங்கப்பட்டிருக்கும் கூட்டில் உதவுப் பணத்தொகை செலுத்துநரின் அங்கத்துவ இலக்கத்தை இடுதல்.

அங்கத்துவ இலக்கங்கள் கீழ் கண்டவாறு உருவாக்கப்பட்டுள்ளன.

* முதல் இரண்டு இலக்கங்கள் -உரிய - மாவட்டத்தின் குறியீட்டு இலக்கம் உதாரணமாக
01 - கொழும்பு.

* மூன்றாவது நான்காவது இலக்கங்கள் -உரிய பிரதேசச் செயலகத்தின் குறியீட்டு இலக்கம் உதாரணமாக
02 _ கடுவெல.

* ஐந்தில் இருந்து எட்டு வரையான இலக்கங்கள் உரிய பிரதேசச் செயலகத்தில் இணைந்த விண்ணப்பத்தாரிகளின் தொடரான இலக்கம் -0001 முதல் 9999 வரை.

முன் சொல்லப்பட்டதற்கேற்ப உதாரணமாக கடுவெல பிரதேசச் செயலகத்தில் இணைந்த பத்தாவது விண்ணப்பத்தாரிக்கு கீழே கொடுக்கப்பட்டுள்ள இலக்கம் இருக்கும்.
01020010

சமூகப் பாதுகாப்புச் சபை 2 படிவத்தினைக் கொண்ட பற்றுச்சீட்டை சரியாகவும் தெளிவாகவும் தயார் செய்தல். இரண்டு பக்கமும் காபனிடப்பட்ட காகிதம் பாவிக்கப்படல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

_ பிரதி பற்றுச் சீட்டு (மஞ்சள் ) விண்ணப்பத்ததுடன் மூல பற்றுச்சீட்டுடன் (நீலம் ) இணைத்து விண்ணப்பத்தாரிக்கு கையளித்தல்.

சுயதொழில் புரிவோருக்கான ஓய்வூதியச் சம்பளம் சமூகப் பாதுகாப்புப் பிரதிலாபத்திட்டம் சம்பந்தமான வெவ்வேறு வைப்புப் பதிவிலும் திரட்டப்பட்ட தொகையையும் விண்ணப்பத்தாரியின் விபரங்களையும் பதிவு செய்தல்.

_ ஒவ்வொரு நாள் முடிவிலும் அந்த நாள் மீதான பணவசூலின் அட்டவணையை தயார் செய்தல்.

_மொத்த தொகைக்கான உறுதிச் சீட்டை வழங்குவதற்கு ஏற்பாடு செய்தலும் அதற்காக கணக்காளரின் அனுமதியைப் பெறுதலும்.

_சிறாப்பருக்கு முழு பணவசூலையும் உறுதிச் சீட்டையும் அட்டவணையையும் கையளித்தல்.

(ஈ) சிறாப்பா்.

_ விடய எழுதுவினைஞரால் கையளிக்கப்பட்ட பணவசூலை ஏற்றல்.

_ விடய எழுதுவினைஞருக்கு அலுவலக பற்றுச்சீட்டை வழங்குதல்.

_மற்றய சேமிப்புக்களைப் போல் இவைகளையும் பதிந்து வைத்திருத்தல் (இந்தப் பணச் சேகரிப்புகள் வைப்பு கணக்கில் வரவு வைக்கப்படல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகப் பாதுகாப்புச் சபை தலைவருக்கு அனுப்புவதற்காக சமூகப் பாதுகாப்புச் சபை 5 க் கொண்ட படிவத்திற்கேற்ப ஒவ்வொரு இருவார காலவரை முழுத்தொகை வசூலிப்பின் கொடுப்பனவிற்கான உறுதிச்சீட்டையும் தயார் செய்தல்.

(உ) விடய எழுதுவினைஞர்.

ஒவ்வொரு மாதத்தின் மூன்றாவது வாரத்திற்குள்ளும் பணம் திரட்டப்பட்ட மாதத்திற்கு பிந்திய மாதத்தின் முதலாவது வாரத்திற்குள்ளும் சமூகப் பாதுகாப்புச் சபை 4, 5க் கொண்ட படிவங்களில் (இவை சகல பிரதேசச் செயலாளர்களும் விநியோகிக்கப்பட்டிருக்கிறது ) ஒழுங்கு முறையே உரிய மாதத்தின் முதல் இரண்டாவது வாரம் மூன்றாவது வாரம் நான்காவது வாரங்களிற்குள் பணம் திரட்டுதல் சம்பந்தமான அட்டவணையை தயார் செய்தல்.

ஒவ்வொரு இரு வாரங்களில் சேகரிக்கப்பட்ட முழுத்தொகையை செலுத்துவதற்கான கொடுப்பனவு உறுதிக் கூற்றுச்சிட்டை தலைவர் சமூகப் பாதுகாப்புச் சபை என ச.பா.ச 5ம் படிவத்தில் தயாரிக்கப்பட வேண்டும்.

வைப்புக் கணக்கின் முழுத்தொகை மீது வரையப்பட்ட காசோலையை கணக்காய்வுப் பகுதியிலிருந்து பெற்று சமூகப் பாதுகாப்புச் சட்டத்தின் 4 ,5ஐக் கொண்ட படிவங்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவுத் தபாலில் காசோலையும் உரிய விண்ணப்பங்களையும் கீழே குறிப்பிட்ட விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

தலைவர்,
சமூகப்பாதுகாப்புச் சபை,
585, காலி வீதி,
கொழும்பு -06.

ஆவணங்களை கோவைப்படுத்தும் நடவடிக்கைகளை விரைவுபடுத்தவும் உதவுப்பணத்தொகை செலுத்துநர்களால் அவர்களது பிரதிலாபத்தைப் பெறும் உரிய காலத்தில் ஏற்படக்கூடிய கஸ்ட்டங்களை நீக்குவதற்கும் விண்ணப்பத்தில் விண்ணப்பத்தாரிகளின் முழுப்பெயர் சரியான விலாசம் கடிதப் போக்குவரத்திற்காக அடையாள அட்டை இலக்கம், பிறந்த திகதி, தொழில் சம்பந்தமான ஏனைய விடையங்களைச் சரியாகப் பதிவதற்கு விசேட கவனத்தை செலுத்துமாறு சபை சம்பந்தப்பட்ட சகல உத்தியோகத்தரிடமிருந்து எதிர்பார்க்கிறது.

அங்கத்தினரைப் சேர்க்கும் பணியை இலகுவாக நிறைவேற்றுவதற்கு தேவைப்படக்கூடிய மேலதிக தகவல்களையோ அல்லது விளக்கங்களையோ பெற்றுக் கொள்ள வேண்டுமானால் கீழே குறிப்பிடப்பட்டிருக்கும். எந்தவொரு உத்தியோகத்தரிடமிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15.தொடர்புகொள்ளவேண்டிய தொலைபேசிஇலக்கங்கள் உத்தியோகத்தர்கள்.

(1) திருமதி.வீ.ஜெகராசசிங்கம். ச. சே. அ; 877122
மேலதிகச் செயலாளர், ச. பா. ச; 597755
சமூகசேவைகள்அமைச்சு. வதிவிடம்; 584397
தலைவர்,
சமூகப் பாதுகாப்புச் சபை.

(2) திரு. ஜனக் மகேந்ர அதிகாரி ச. பா. ச; 597754
செயற்பாட்டு நிர்வாகி
சமூகப் பாதுகாப்புச் சபை.

(3) திரு. டீ. அசோக்க. பீரிஸ் ச. பா. ச; 508942
பொது முகாமையாளர்,
சமூகப்பாதுகாப்புச்சபை. ச.பா.ச; 586222

(4) திரு. பீ. எ. பீ. சீ. பி. ஜயவர்த்தன (சபை)
பிரதிப்பொதுமுகாமையாளர்,(நிதி) (அவ்வாறே)
சமூகப் பாதுகாப்புச் சபை.

(5) திரு .எம் .எம் .எஸ். பெனான்டோ
பிரதிபொதுமுகாமையாளர், (சபை)
(செயற்பாடு) (அவ்வாறே)
சமூகப் பாதுகாப்புச் சபை.

(6)திரு.ரி. ஜே. எஸ். விஜயவிக்ரம (சபை)
ஆலோசகர், (அவ்வாறே)
சமூகப் பாதுகாப்புச் சபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சுயமாகத் தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கான ஓய்வூதிய சமூகப் பாதுகாப்புப் பிரதி இலாபத்திட்டம் - செலுத்தவேண்டிய பருவப்பணமும் அதனால் உரித்தாகும் ஓய்வூதியம் பற்றிய விபரமும்**

| திட்டத்திற் சேரும்போது அடுத்துவரும் பிறந்த தினத்திற்கு வயது (வருடம்) | ஓய்வூதியம் கிடைக்கும் வரை முழு மும்மாதப் பருவ எண்ணிக்கை | ஓய்வூதியம் கிடைக்கும் வரை செலுத்த வேண்டிய மும்மாத பருவப் பணம் (ரூபாய்) | ஓய்வு உரித்தாகும் மாதாந்த ஓய்வூதியம் (ரூபாய்) | மும்மாதங்களில் செலுத்துவதானால் ஓய்வூதியம் உரித்தாகும் வரை செலுத்த வேண்டிய பருவப்பணம் (ரூபாய்) | திட்டத்தில் சேரும்போதே எல்லாப் பருவப் பணத்தையும் ஒரே முறையில் செலுத்துவதானால் செலுத்த வேண்டிய முழுப் பருவப் பணம் (ரூபாய்) | அவ்வாறு ஒரே * முறையில் செலுத்தும் போது கிடைக்கப் பெறும் கழிவு வீதம் |
|---|---|---|---|---|---|---|
| 18 | 168 | 50 | 2500 | 8400 | 1920 | 77.14 |
| 19 | 164 | 51 | 2300 | 8364 | 1940 | 77.04 |
| 20 | 160 | 52 | 2100 | 8320 | 1965 | 76.38 |
| 21 | 156 | 53 | 1900 | 8268 | 1985 | 75.99 |
| 22 | 152 | 54 | 1750 | 8208 | 2005 | 75.57 |
| 23 | 148 | 55 | 1600 | 8140 | 2020 | 75.18 |
| 24 | 144 | 56 | 1450 | 8064 | 2040 | 74.70 |
| 25 | 140 | 57 | 1325 | 7980 | 2055 | 74.25 |
| 26 | 136 | 58 | 1200 | 7888 | 2070 | 73.76 |
| 27 | 132 | 59 | 1100 | 7788 | 2080 | 73.29 |
| 28 | 128 | 60 | 1000 | 7680 | 2095 | 72.72 |
| 29 | 124 | 63 | 950 | 7812 | 2175 | 72.16 |
| 30 | 120 | 66 | 900 | 7920 | 2255 | 71.53 |
| 31 | 116 | 69 | 850 | 8004 | 2330 | 70.89 |
| 32 | 112 | 73 | 800 | 8176 | 2440 | 70.16 |
| 33 | 108 | 77 | 750 | 8316 | 2515 | 69.76 |
| 34 | 104 | 81 | 725 | 8424 | 2605 | 69.08 |
| 35 | 100 | 85 | 700 | 8500 | 2695 | 68.29 |
| 36 | 96 | 88 | 690 | 8448 | 2760 | 67.33 |
| 37 | 92 | 91 | 680 | 8372 | 2820 | 66.32 |
| 38 | 88 | 96 | 670 | 8448 | 2925 | 65.38 |
| 39 | 84 | 100 | 660 | 8400 | 2975 | 64.58 |
| 40 | 80 | 104 | 650 | 8320 | 3020 | 63.70 |
| 41 | 76 | 109 | 640 | 8284 | 3095 | 62.64 |
| 42 | 72 | 114 | 630 | 8208 | 3165 | 61.44 |
| 43 | 68 | 122 | 620 | 8296 | 3305 | 60.16 |
| 44 | 64 | 128 | 610 | 8192 | 3385 | 58.68 |
| 45 | 60 | 135 | 600 | 8100 | 3445 | 57.47 |
| 46 | 56 | 144 | 590 | 8064 | 3560 | 55.85 |
| 47 | 52 | 152 | 580 | 7904 | 3615 | 54.26 |
| 48 | 48 | 163 | 570 | 7824 | 3705 | 52.65 |
| 49 | 44 | 174 | 560 | 7656 | 3755 | 50.95 |
| 50 | 40 | 180 | 550 | 7200 | 3670 | 49.03 |
| 51 | 36 | 185 | 540 | 6660 | 3545 | 46.77 |
| 52 | 32 | 192 | 530 | 6144 | 3400 | 44.66 |
| 53 | 28 | 205 | 520 | 5740 | 3315 | 42.25 |
| 54 | 24 | 220 | 510 | 5280 | 3185 | 39.68 |
| 55-59 | 20 | 235 | 500 | 4700 | 2955 | 37.13 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊனமுற்றபோதும், மரணம் சம்பவித்தபேதும் கொடுப்பனவு

| I வது பிரிவு | II வது பிரிவு | III வது பிரிவு | IV வது பிரிவு | V வது பிரிவு |
|---|---|---|---|---|
| திட்டத்தில் சேரும் போது பிறந்த திகதிக்கு வயது (ஆண்டுகளில்) | ஊனமுறும்போது அல்லது மரணிக்கும் போது வயது | நிரந்தர பூரண ஊனமுற்ற சந்தர்ப் பத்தில் ஒரேயடியாகச் செலுத்தும் பணிக்கொடை | நிரந்தர பாதி ஊனமுற்ற சந்தர்ப் பத்தில் ஒரேயடியாகச் செலுத்தும் பணிக்கொடை | மரணம் சம்பவித்தால் ஒரேயடியாகச் செலுத்தும் பணிக்கொடை |
| 18 முதல் 54 வரை | ஊனமுற்ற அல்லது மரணித்த சந்தர்ப்பத்தில் அடுத்த பிறந்த திகதிக்கு வயது | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| | 18 - 33 வரை | 50,000.00 | 25,000.00 | 25,000.00 |
| | 34 - 43 வரை | 40,000.00 | 20,000.00 | 20,000.00 |
| | 44 - 51 வரை | 30,000.00 | 15,000.00 | 15,000.00 |
| | 52 - 56 வரை | 20,000.00 | 10,000.00 | 10,000.00 |
| | 57 - 60 வரை | 16,000.00 | 8,000.00 | 8,000.00 |
| 55 - 59 வரை | அங்கத்துவம் பெற்ற தினத்திலிருந்து அங்கத்துவப் பணம் செலுத்தும் கடைசித் திகதி வரையான காலத்துக்குள் | 12,000.00 | 6,000.00 | 6,000.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Foundation.
nam.org

Digitized by Nool
noolaham.org | a